# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 169/ந/2017**

**ஆணை எண். 57/2018**

**நாள் : 20/03/2018**

**திரு பொ. மணி,
வடசேரி,
நாகர்கோவில்.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,
நாகர்கோயில் நகராட்சி,
நாகர் கோயில்.** – **எதிர் மனுதாரர்**

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், வடசேரி, எண்.51, காணியாளன் புதுத் தெரு முகவரியில் வசிக்கும் திரு பொ. மணி அவர்களின் 05.08.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.08.2017 அன்று பெறப்பட்டு 169/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுபவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு சம்பந்தமாக மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட 12.02.2018 நாளிட்ட கடிதத்தினை பரிசீலனை செய்து கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## <u>ஆணை</u>

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், வடசேரி, எண்.51, காணியாளன் புதுத் தெரு முகவரியில் வசிக்கும் திரு பொ. மணி என்பவர் நாகர்கோவில், வார்டு எண்.29, அஞ்சு தெரு 12– கதவிலக்கமிட்ட வீட்டிற்கு தனது தந்தையார் திரு பொன்னம்பலம் பெயரில் இருந்த சொத்து வரியினை, திருமதி கே. பொன்னம்மாள் என்பவர் பெயரில் தாக்கலாகி இருந்ததை இரத்து செய்யக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்திருந்தார். இம்முறைமன்ற நடுவத்திற்கு, மேற்குறிப்பிட்ட கோரிக்கைக் குறித்து முறையீடு செய்த பின்னர் திருமதி கே. பொன்னம்மாள் என்பவர் பெயரில் தாக்கலாகி இருந்த சொத்துவரி தனது தந்தையார் திரு பொன்னம்பலம் பெயரில் திருத்தம் செய்யப்பட்டுவிட்டது என்றும், எனவே தனது முறையீட்டு மனு மீதான நடவடிக்கையை

முடித்து வைத்து ஆணையிடக்கோரி 12.02.2018 நாளிட்ட கடிதத்தில் மனுதாரர் கோரியுள்ளார். எனவே, மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துக் கொள்ள தீர்மானித்து இம்முறைமன்ற நடுவம் அவ்வாறே ஆணையிடுகிறது.

**2018**– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், **20**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. **திரு பொ. மணி,**
   **எண்.51, காணியாளன் புதுத் தெரு,**
   **வடசேரி, நாகர் கோயில்,**
   **கன்னியாகுமரி மாவட்டம்.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **நாகர்கோயில் நகராட்சி,**
   **நாகர்கோயில்,**
   **கன்னியாகுமரி மாவட்டம்.**

நகல் : **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**